Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

5 ரமலான் 1438 ஹிஜ்ரி கமரி 1 இஹ்ஸான் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

1 ஜூன் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**என் மீது வஹியை இறக்கியவனே முழு உலகிற்கும் இறைவனாவான். அவன் எனக்காக உறுதியான அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினான். அவன் என்னை இக்காலத்திற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான்.**

**இறைவன் கிடைப்பதற்கரிய பெரும் கருவூலமாக இருக்கின்றான். நீங்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் அவன் உங்களுக்கு உதவி புரிகின்றவனாயிருக்கின்றான். எனவே அத்தகைய இறைவனுக்கு மதிப்பளியுங்கள். அவன் இல்லாமல் நீங்கள் ஒரு பொருட்டல்ல. உங்களது வழிவகைகளும் திட்டங்களும் ஒன்றுமற்றவையாகும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

என் மீது வஹியை இறக்கியவனே முழு உலகிற்கும் இறைவனாவான். அவன் எனக்காக உறுதியான அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினான். அவன் என்னை இக்காலத்திற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான். அவனைத் தவிர வானங்களிலும் பூமியிலும் வேறு இறைவன் இல்லை. எவர் அவன் மீது நம்பிக்கை கொள்ள மாட்டாரோ அவர் பாக்கியம் கெட்டவரும் அவமானத்திற்குரியவருமாவார்.

நாம் சூரியனைப் போன்று, நமது இறைவனின் ஒளிமிக்க வஹியைப் பெற்றோம். அவனே முழு உலகிற்கும் இறைவன் என்றும் அவனைத் தவிர வேறு யாருமில்லை என்றும் நன்கு அறிந்து கொண்டோம். நாம் அடைந்த இறைவன் எத்தகைய வல்லமையுடையவனும், தான் நிலைத்திருப்பது மட்டுமின்றி மற்ற அனைத்தையும் நிலைத்திருக்கச் செய்யக் கூடியவனுமாக இருக்கின்றான்! நாம் கண்ட இறைவன் வலுவான ஆற்றல்களை உடையவன் ஆவான். அவன் முன் எந்த விஷயமும் சாத்தியமில்லாதது என்றாலும் அவன் தன் வேதத்திற்கும் வார்த்தைப்பாட்டிற்கும் மாறாக எதுவும் செய்வதில்லை. இதுவே உண்மையாகும்.

நீங்கள் துஆ செய்யும்போது தங்களது எண்ணங்களைக் கொண்டே ஓர் இயற்கை சட்டத்தை உருவாக்கிக் கொண்ட அந்த அறிவீனர்களான இயற்கைவாதிகளைப் போல் செய்யாதீர்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட அவ்வியற்கை சட்டங்கள் மீது இறைவனது வேதத்தின் முத்திரை பதிக்கப்படவில்லை. ஏனெனில் அவை மறுக்கப்பட்டவையாக இருக்கின்றன. அவர்களது பிரார்த்தனைகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவர்களோ பார்வையிழந்த குருடர்களாகவும் உயிரில்லாத பிணங்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் இறைவன் முன்பு தங்களால் வகுக்கப்பட்ட சட்ட திட்டங்களை சமர்ப்பிக்கின்றார்கள். அவனது எல்லையற்ற சக்திகளுக்கு ஒரு வரம்பை நிர்ணயிப்பதுடன் அவனைப் பலவீனமுள்ளவனாகவும் கருதுகிறார்கள். ஆகவே அவர்களது நிலைமைக்கேற்பவே அவர்களோடு நடந்து கொள்ளப்படும்.

ஆனாலும் நீர் பிரார்த்தனைக்காக நிற்கும்போது உமது இறைவன் எல்லாவற்றின் மீதும் வல்லமையுடையவன் என்பதனை உறுதியாக நம்ப வேண்டியது உமது கடமையாகும். அப்போதுதான் உமது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும். மேலும் நாம் கண்ட இறைவனது வல்லமைகளான அற்புதங்களை நீரும் காண்பீர். இவை அனைத்தும் நமது கண்களால் கண்ட சாட்சிகளே தவிர வெறும் கட்டுக்கதையோ கற்பனையோ அல்ல. இறைவன் ஒவ்வொன்றின் மீதும் சக்தியுள்ளவன் என்று கருதாதவரின் பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக்கப்படும்? மேலும் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவது இயற்கை சட்டத்திற்கு மாறானது என்று தவறாக நம்பும் மனிதனுக்கு, பிரச்சனைக்குரிய இக்கட்டான சமயங்களில் பிரார்த்தனை செய்ய எவ்வாறு தூண்டுதல் உண்டாகும்?

நற்பேறு பெற்றவரே! நீர் அவர்களைப் போல் ஆகி விட வேண்டாம். உமது இறைவன் அளவற்ற நட்சத்திரங்களை தூண்களின்றித் தொங்க விட்டிருக்கிறான். அவன் வானங்களையும் பூமியையும் ஒன்றுமில்லாததில் இருந்து படைத்திருக்கிறான். இவ்வாறிருக்க அவன் உமது பணியைச் செய்ய சக்தி அற்றவனாயிருக்கிறான் என்று நீர் அவனைப் பற்றி தவறான எண்ணம் கொள்கிறீரா? உமது தவறான எண்ணமே உமக்கு இறைவனது உதவி கிடைக்காமல் செய்து விடும்.

நமது இறைவனிடத்தில் அளவற்ற அற்புதங்களெல்லாம் காணப்படுகின்றன. ஆனால் உண்மையான மனத்துடனும், நம்பிக்கையோடும் அவனுக்காக ஆகி விட்டவர்களே அவற்றைக் காண்கின்றார்கள். அவனது வல்லமைகள் மீது திட நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கும், அவனுக்கு உண்மையானவனாகவும், நம்பிக்கைக்குரியவனாகவும் ஆகாத மற்றவர்களுக்கும் அந்த அற்புதங்களை அவன் வெளிப்படுத்திக் காட்டுவதில்லை. எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ள இறைவன் ஒருவன் தமக்கு இருக்கிறான் என்பதனை இதுவரை அறியாதவர் எத்தகைய துர்பாக்கியவராகயிருக்கிறார். நமது சுவர்க்கம் நமது இறைவனேயாவான். நமது மேலான இன்பங்கள் அனைத்தும் நமது இறைவனிடத்தே இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனை நன்கு கண்டிருக்கின்றோம். அழகனைத்தும் அவனிடத்திலே அமைந்துள்ளன. ஆகவே இச்செல்வத்தை நாம் உயிரை தியாகம் செய்து பெற நேரிட்டாலும் கண்டிப்பாகப் பெறுவதற்கு அது தகுதியுள்ளதாயிருக்கிறது. மேலும் நாம் நம்மை முற்றாய் அர்ப்பணித்தால்தான் பெற முடியும் என்றால், இவ்விலையுயர்ந்த மாணிக்கம் அவ்வாறு வாங்கத் தகுதியுள்ளதாக இருக்கிறது.

இழப்பிற்குரியோரே! உங்களுக்கு வளம் தரக்கூடிய இந்த ஊற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உயிரோட்டமுள்ள ஒரு நீர் ஊற்றாகும். இது உங்களை காப்பாற்றும். நான் என்ன செய்வேன்! இந்த நற்செய்தியை உங்கள் இதயங்களில் நான் எவ்வாறு பதிய வைப்பேன். உங்களின் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதனை மக்களெல்லாரும் கேட்கும் பொருட்டு நான் எந்த முரசைக் கொட்டி கடை வீதிகளில் அறிவிப்பு செய்வேன்? மக்கள் செவிகளெல்லாம் கேட்பதற்கான சிகிச்சையை நான் எம்மருந்தைக் கொண்டு செய்வேன்?

நீங்கள் இறைவனுக்காக ஆகிவிட்டால் அவன் உங்களுடையவனாய் ஆகிவிடுவான் என்பதனை நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கையில் இறைவன் உங்களுக்காக விழித்துக் கொண்டிருப்பான். நீங்கள் உங்களது பகைவர்களை குறித்து கவனமின்றி இருக்கும்போது அவன் அவர்களை கண்காணித்து வருவான். மேலும் உங்களுக்கு விரோதமான அவர்களது சதித்திட்டங்களெல்லாம் முறியடிப்பான். உங்கள் இறைவன் எத்தகைய வல்லமைமிக்கவன் என்பதை

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், எல்லா வகையான தீவிரவாதமும், அநீதியும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரானதாகும் என்று நமக்கு கூறியுள்ளார்கள்.

சிலரின் செயல்கள், இஸ்லாத்தின் பெயரால் உலகில் குழப்பம் விளைவிக்க முயற்சி செய்யக்கூடியதாக அமைந்தால் அது அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய போதனையின் காரணமாக அல்ல. மாறாக, அது அந்த போதனையிலிருந்து முஸ்லிம்கள் விலகிச் சென்றதன் விளைவாகும். மேலும், குழப்பம் ஏற்படுவதற்குக் காரணம் இக்காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ளாததேயாகும்.

நாம் அந்த போதனையின் ஒளியில் உலகிற்கு அமைதி, சகோதரத்துவம் மற்றும் சமாதானத்திற்கான வழியைக் காட்டுகின்றபோது பெரும்பாலான முஸ்லிம் அல்லாத நல்லியல்பு கொண்ட மக்கள் இஸ்லாத்தின் போதனைகள் மிகவும் அழகுவாய்ந்த போதனைகளாகும் என்று கூறுகின்றனர். எனது ஜெர்மனி சுற்றுப் பயணத்தின்போது பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டது. பள்ளிவாயில் திறப்பு நிகழ்ச்சியில் மற்றும் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி ஆகிய சந்தர்ப்பங்களில் அவை நிகழ்ந்தன.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் தற்போதைய ஜெர்மனி சுற்றுப் பயணத்தின்போது பள்ளிவாயில் திறப்பு நிகழ்ச்சி மற்றும் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி ஆகியவற்றில் கலந்து கொண்ட சில விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்களின் தற்போதைய ஜெர்மனி சுற்றுப் பயணத்தின்போது பள்ளிவாயில் திறப்பு நிகழ்ச்சி மற்றும் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி ஆகியவற்றை ஊடகங்கள் கவரேஜ் செய்தன. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாக ஒரு கணிப்பின் அடிப்படையில் 39 மில்லியன் மக்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டியுள்ளது.

அல்லாஹ்வின் அருளால் யூ.கே -வில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புகின்ற பணி பரந்த அளவில் நடைபெற்று வருகின்றது. மேலும் அதிகமாக ஜமாஅத் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது. இங்கு யூ.கே -வில் ஜமாஅத் நிகழ்ச்சிகள் மூலமாக உலகம் முழுவதும் இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் யூ.கே -வில் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கு நிகழ்ச்சிகளை ஊடகங்கள் கவரேஜ் செய்ததையும் அதில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாகவும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அல்ஜீரியாவிலும், பாகிஸ்தானிலும், உலகில் அஹ்மதிய்யத்திற்கு எதிராக எதிர்ப்பு அதிகரித்து வரும் நாடுகளிலும் உள்ள அஹ்மதிகளுக்காக குறிப்பாக துஆ செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**28 ஏப்ரல் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **28 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

உலகின் பத்திரிகையாளர்கள் அல்லது முஸ்லிம் அல்லாத நபர்களைச் சந்தித்துப் பேசுகின்ற சந்தர்ப்பம் அல்லது அவர்களுடன் கேள்வி பதிலுக்கான சந்தர்ப்பம் எனக்கு அமையும்போது அவர்கள் ஏதாவது ஒரு வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தக் கேள்வியை என்னிடம் கண்டிப்பாகக் கேட்கின்றனர். இஸ்லாத்தைப் பற்றி உலக மக்களுக்கு அச்சம் உள்ளதற்கான காரணம் என்ன? அது எப்படி அகலும்? என்பது அவர்களின் கேள்வியாகும். இதற்கான காரணம் இஸ்லாத்தின் போதனைகள்தான் என சிலர் வெளிப்படையாகவும், சிலர் மறைமுகமான சொற்களிலும் கூறுகின்றனர்.

ஆக, இந்த முறையும் ஜெர்மனி சுற்றுப் பயணத்தின்போது ஒரு பத்திரிகையாளர் என்னிடம் இதனைக் கூறினார். ஜெர்மனியில் இஸ்லாத்தைப் பற்றிய அச்சம் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக முஸ்லிம் அல்லாத இங்குள்ள உள்ளூர்வாசிகள் முஸ்லிம்கள் மீது அநீதியிழைத்து விடுகின்றனர் என்று நம்மீது அனுதாபத்தை வெளிப்படுத்தும் வகையிலும் பேசினார். இதனைக் கூறி விட்டு இது தொடர்பான உங்களின் எதிர்நடவடிக்கை என்ன? என்று என்னிடம் கேட்டார். இந்தக் கேள்வி ஜெர்மனியுடன் மட்டும் தொடர்புடைய –தல்ல. மாறாக, இதற்கு முன்பும் பலமுறை இந்தக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இந்தக் கேள்விதான் நமது தப்லீகிற்கான வழியையும் திறந்து தருகிறது. இஸ்லாத்தின் பெயரால் சில அமைப்புகள் அல்லது சில நபர்களின் தவறான செயல்கள் மற்றும் தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்துவதனால் இந்த அச்சம் அதிகரிக்கின்றது. முஸ்லிம் அல்லாத மக்களின் எதிர்நடவடிக்கைகள் அல்லது அச்சங்கள் நியாயமானதேயாகும். அதுபோன்ற முஸ்லிம்களைப் பற்றி அவர்களுக்கு அச்சம் அதிகரிக்கின்றது.

ஆனால் அதற்காக நாம் எந்தவொரு எதிர்மறை நடவடிக்கைகளையும் கையாள்வதில்லை. பெயர் தாங்கி ஆலிம்களின் தவறான பயிற்சியின் காரணமாகவும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் புரியாததன் காரணமாகவும்தான் இதுபோன்ற தீவிரவாதக் குழுக்கள் வளர்கின்றன என்றே நான் எப்பொழுதும் அவர்களின் கேள்விகளுக்கு பதிலாகக் கூறுகின்றேன். இன்னும் சொல்வதென்றால், இவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவே நிகழ்கின்றன. இதுபோன்ற காலக்கட்டத்திலேயே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார் எனக் கூறப்பட்டுள்ளது. அன்னார் சரியான போதனையை உலகில் பரப்ப வேண்டியதிருந்தது. மேலும் நமது நம்பிக்கையின்படி, எந்த வாக்களிக்கப்பட்டவரைப் பற்றி முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அவர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் ஆவார்கள். எனவே அன்னாரின் போதனையின்படியே நமது எதிர்நடவடிக்கை அமைந்துள்ளது. இஸ்லாத்தின் அமைதியின் தூதுச் செய்தியைப் பரப்புங்கள் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு போதித்துள்ளார்கள்.

ஆக, உலகின் எல்லா இடங்களிலும் அன்னாரின் இந்த போதனைகளுக்கேற்பவே நாம் பணி செய்கின்றோம். ஆயினும் தீவிரவாதக் குழுக்களின் செயல்களின் காரணமாகவும் இந்த மேற்கத்திய நாடுகளிலும் ஏனைய முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல்களின் காரணமாக –வும் இஸ்லாத்தைப் பற்றி ஏற்பட்டுள்ள சந்தேகங்களை அகற்றுவதற்கு நமக்கு அதிகமாக உழைக்க நேரிடும். அதற்காக நாம் முயற்சியும் செய்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், எல்லா வகையான தீவிரவாதமும், அநீதியும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரானதாகும் என்று நமக்கு கூறியுள்ளார்கள். உலகம் தோன்றிய நாள் முதல் அனைத்து நாடுகளைச் சார்ந்த நல்லடியார்களும் இதற்கு சாட்சி பகர்ந்துள்ளனர். அதாவது, இறை பண்புகளைப் பின்பற்றுதல் என்பது மனிதன் எஞ்சியிருப்பதற்காக வாழ்வளிக்கும் ஜீவ நீராகும். அல்லாஹ்வின் நற்பண்புகள் மற்றும் குணநலன்களை மேற்கொள்ள வேண்டும். அந்நிலையிலேயே மனிதன் எஞ்சியிருக்க முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: மனிதனின் பௌதீக மற்றும் ஆன்மீக வாழ்வு என்பது அமைதியின் உறைவிடமான இறைவனின் நற்பண்புகளை பின்பற்றுவதுடன் தொடர்புடையது ஆகும். அமைதியின் உறைவிடமாகிய அல்லாஹ் அவனது நற்பண்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே விரும்புகிறான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ‘‘இறைவன் திருக்குர்ஆனை இந்த வசனத்திலிருந்தே ஆரம்பம் செய்துள்ளான். அந்த வசனம் சூரா ஃபாத்திஹாவில் உள்ளது. அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் அதாவது அனைத்து முழுமையான மற்றும் தூய்மையான பண்புகளும் இறைவனிடமே உள்ளன. அவன் அனைத்து உலகங்களுக்கும் இறைவன் ஆவான். ‘ஆலம்’ என்ற சொல்லில் பலதரப்பட்ட அனைத்து சமுதாயங்களும் அனைத்து காலக்கட்டங்களும், நாடுகளும் அடங்கும்’’. (பைகாமே சுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 440)

பின்னர் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘‘எனவே, எந்த முழுமையான மற்றும் உண்மையான இறைவன் மீது ஈமான் கொள்வது ஒவ்வொரு மனிதனின் மீதும் கடமையோ அந்த இறைவன் ரப்புல் ஆலமீன் ஆவான் என்பது எந்த விவாதமுமின்றி ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். அவனது படைத்துப் பரிபாலித்தல் என்ற பண்பு குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தோடு மட்டும் தொடர்புடையதல்ல அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நாட்டுடனோ அல்லது குறிப்பிட்ட காலத்துடனோ

மட்டும் தொடர்புடையதல்ல. அவன் அனைத்து சமுதாயங்களின் இறைவன் ஆவான். அவன் அனைத்து காலகட்டங்களின் இறைவன் ஆவான். அவன் அனைத்து இடங்களுக்கும் இறைவன் ஆவான். அனைத்து நாடுகளுக்கும் அவனே இறைவன் ஆவான். மேலும் அனைத்து அருட்களுக்கும் அவனே உறைவிடம் ஆவான். மேலும் அனைத்து வகையான பௌதீக மற்றும் ஆன்மீக ஆற்றல்கள் அவனிடமே உள்ளன. அவன் மூலமாகவே அனைத்து உயிரினங்களும், படைப்புகளும் பராமரிக்கப்படு –கின்றன. அனைவருக்கும் அவனே ஆதாரவாக இருக்கின்றான்''. (பைகாமே சுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 442) அல்லாஹ்வின் ரப்புல் ஆலமீன் –அகில உலகங்களின் இறைவன் என்ற பண்பின் விளக்கம் இதுவேயாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நமது இறைவனின் நற்பண்புகள் இவ்வாறிருக்க நாமும் அந்த நற்பண்புகளைப் பின்பற்றுவதே நமக்கு உகந்ததாகும்''. (பைகாமே சுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 443) இதே பண்புகளும், குணநலன் –களும்தான் ஓர் உண்மையான முஸ்லிமிடம் காணப்பட வேண்டும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்து நமக்கு அருளிய அறிவும், இறை ஞானமும் இதுவேயாகும். உலகில் அமைதி நிலைபெற இந்த வழிமுறையே மிகவும் அவசியமானதாகும். மேலும் உலகில் சமாதானத்தின் அடித்தளத்தை அமைக்கும் விஷயம் இதுவேயாகும். இந்த தூதுச் செய்தியை உலகின் அனைத்து மூலைகளிலும் பரப்புவதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் முயற்சி செய்கின்றனர்; முயற்சி செய்யவும் வேண்டும். சிலரின் செயல்கள், இஸ்லாத்தின் பெயரால் உலகில் குழப்பம் விளைவிக்க முயற்சி செய்யக்கூடியதாக அமைந்தால் அது அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய போதனையின் காரணமாக அல்ல. மாறாக, அது அந்த போதனையில் இருந்து முஸ்லிம்கள் விலகிச் சென்றதன் விளைவாகும். மேலும், குழப்பம் ஏற்படுவதற்குக் காரணம் இக்காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ளாததோகும். எனவே நாம் அந்த போதனையின் ஒளியில் உலகிற்கு அமைதி, சகோதரத்துவம் மற்றும் சமாதானத்திற்கான வழியைக் காட்டுகின்றபோது பெரும்பாலான முஸ்லிம் அல்லாத நல்லியல்பு கொண்ட மக்கள் இஸ்லாத்தின் போதனைகள் மிகவும் அழகுவாய்ந்த போதனைகள் ஆகும் என்று கூறுகின்றனர். எனது ஜெர்மனி சுற்றுப் பயணத்தின்போது பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டது. பள்ளிவாயில் திறப்பு நிகழ்ச்சியில் மற்றும் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டும் நிக்ழச்சி ஆகிய சந்தர்ப்பங்களில் அவை நிகழ்ந்தன.

வால்செட் என்ற நகரத்தில் பள்ளிவாயில் திறப்பு விழா நிகழ்ச்சி நடந்தது. அங்கு பள்ளிவாயில் கட்டப்பட்டுள்ளது. அங்கு மற்றொரு நகரத்தில் வருகை தந்திருந்த ஒரு மருத்துவர் கூறினார்: அமைதியை விரும்பும் முஸ்லிம்களை நான் எங்கிருந்தாலும் கண்டு விட வேண்டும் என்ற தேடுதல் என் வாழ்நாள் முழுவதும் இருந்து வந்தது. இன்று நீங்கள் எனது அந்த விருப்பத்தை நிறைவேற்றி விட்டீர்கள். இன்று எனக்கு அப்படிப்பட்ட மக்கள் கிடைத்து விட்டதால் நான் என்னை நற்பாக்கியம் பெற்ற மனிதனாகக் கருதுகிறேன்.

அடுத்து இத்தாலியைச் சார்ந்த ஒரு பெண்மணியும் வந்திருந்தார். அவர் தமது நண்பர்களுடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறினார்: எனது நண்பர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு அச்சப்பட்டுக் கொண்டிருந் –தார். ஏனென்றால் இஸ்லாத்தைப் பற்றி அவரிடம் எதிர்மறையான உணர்வுகள் இருந்தன. ஆனால் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு இஸ்லாத்தைப் பற்றி அவருக்கு இருந்த எண்ணம் முற்றிலும் மாறி விட்டது. எந்த அளவுக்கு என்றால் உங்களது மார்க்கம் எவ்வளவு அழகு வாய்ந்தது என்பது இன்று எனக்கு தெரிய வந்தது என தனது ஒரு முஸ்லிம் நண்பருக்கு தனது கைபேசியின் வாயிலாக அவர் மெஸேஜ் அனுப்பினார்.

அடுத்து போஸ்னியாவைச் சார்ந்த மிகவும் நன்கு கல்வியறிவு பெற்ற மூன்று பெண்மணிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் தமது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள்: இன்றைய நிகழ்ச்சி தற்போதைய உலகின் கடினமான சூழலில் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஒளி விளக்காகத் திகழ்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவில் அன்னார் அன்பு மற்றும் அண்டை அயலாரின் உரிமைகளை வலியுறுத்தியிருந்தார்கள்.

அடுத்து மற்றொரு பெண்மணி கூறினார்: இன்று உங்களின் இந்த சபையிலிருந்து எனக்கும் கொஞ்சம் அருளைச் சேகரிக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் இங்கு வந்திருப்பது எனக்கு பெருமிதத்திற்குரிய விஷயமாகும். இன்று நான் இங்கு வராமல் இருந்திருந்தால் நிச்சயமாக ஒரு மாபெரும் விஷயத்தை நான் இழந்திருப்பேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக எனக்கு உண்மையான இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்துள்ளது. அது வெளியில் பரப்பப்படும் வெறுப்பு மற்றும் தீவிரவாத இஸ்லாத்திற்கு முற்றிலும் எதிரானதாகும். எனக்கு இங்கு அமைதி மற்றும் அன்பு கிடைத்தது. வெறும் வார்த்தைகளில் எனக்கு அமைதி மற்றும் அன்பு கிடைக்கவில்லை. மாறாக, செயல் ரீதியாக இங்கு எனக்கு வெறுப்பை விரும்பாத நல்ல பல மனிதர்கள் கிடைத்தனர். எனவே, ஒவ்வோர் அஹ்மதியின் தனிப்பட்ட செயலும் கூட மவுனமான தப்லீக்காக அமைந்து விடுகின்றது.

அடுத்து ஒரு விருந்தினர் தனது எண்ணங்களை இந்த சொற்களில் வெளிப்படுத்தினார்: நாம் அனைவரும் ஒரே இறைவனையே ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் பல்வேறு மார்க்கங்கள் பல்வேறு வழிகளைக் காட்டியுள்ளனவே என நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று நான் இங்கு வந்து அறிந்து கொண்டேன். மார்க்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்ட வழியையே காட்டித் தந்துள்ளன. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இவ்விஷயத்தை மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்கள். தீவிரவாதத்தை விரும்பும் முஸ்லிம்கள் மற்றும் ISIS பிரிவிலிருந்து நாங்கள் முற்றிலும் மாற்றமானவர்கள் என அன்னார் தனது சொற்பொழிவில் கூறியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மேலும் அந்த பிரிவினருக்கு இஸ்லாமிய போதனைகளுடன் எந்த தொடர்பும் இல்லை என்றும் கூறினார்கள். அல்லாஹ்வின் பெயரால் உலகில் நடைபெறுகின்ற வேதனை மிகுந்த செயல்களுக்கு நீங்கள் எவ்வகையிலும் பொறுப்பாளிகள் அல்லர் என்பதே உண்மையாகும். மாறாக, இந்த போதனைகளை தவறாகச் சித்தரிக்கும் மக்களே அதற்கு பொறுப்பாளிகள் ஆவர்.

அடுத்து கூறினார்: அன்பு மற்றும் சகோதரத் –துவத்தின் மூலமாக நாம் அந்த குழப்பத்திற்கு எதிராக அணி திரள்வது நம் அனைவரின் பணியாகும். கொலைக் குற்றங்களில் ஈடுபடும் ஒருவர் ஒருபோதும் இறை நம்பிக்கை உடையவராக இருக்க முடியாது என்று கூறிய தங்களின் கருத்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒரு மனிதனைக் கொலை செய்வது என்பது ஒரு வகையில் இறை நம்பிக்கையைக் கொலை செய்வதற்குச் சமம் என்ற தங்களின் கருத்து முற்றிலும் சரியானதாகும். நமது பக்குவம் வாய்ந்த அஹ்மதி பிள்ளைகள் சுற்றுப் புறத்தில் தனது தாக்கத்தை எப்படி ஏற்படுத்துகின்றனர்? என்பதற்கான காட்சியும் நமக்கு காணக் கிடைத்தது.

ஒரு பெண் விருந்தினர் தனது தாக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்: நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது பிள்ளைகளுக்கு அஹ்மதி பிள்ளைகளுடன் நட்பு உள்ளது. அவர்களுக்கு அஹ்மதி பிள்ளைகளுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகு நான் எனது பிள்ளைகளிடம் நல்ல மற்றும் நேர்மறையான மாற்றத்தை உணர்கிறேன். அதன் காரணமாக உங்களின் போதனை என்ன? என்பதை நான் அறிய விரும்பினேன். எனது பிள்ளைகள் நல்ல மக்களுடன் இருக்கின்றனர். பாதுகாப்பாக உள்ளனர் என்பதை இன்று நான் இங்கு வந்த பிறகு அறிந்து கொண்டேன்.

ஆக பிள்ளைகளின் மவுனமான இந்த தப்லீக் அஹ்மதி பிள்ளைகளின் பெற்றோர்கள் மீது மேலும் பல பொறுப்புகளை சுமத்துகின்றன. அவர்கள் தமது பிள்ளைகளின் தர்பிய்யத்தின் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அவர்கள் தமது பிள்ளைகளுக்காக துஆவும் செய்ய வேண்டும். ஏனென்றால் அந்நிலையில்தான் அஹ்மதி பிள்ளைகள் எப்பொழுதும் மற்றவர்கள் மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் சுற்றுப்புற தீமைகளிலிருந்து தப்பிப்பவர்களாகவும் திகழ்வர். இந்த நல்ல தாக்கங்கள் எதிர்காலத்தில் உண்மையான இஸ்லாத்தை உலகில் பரப்பும் பணியில் மிக முக்கிய பங்கு வகிக்கும். நமது பிள்ளைகளுடன் விளையாடி, பழகியவாறு அந்தப் பிள்ளைகள் பெரியவராகும்போது உண்மையான இஸ்லாத்துடன் தொடர்பு கொண்டவர்களாக அவர்கள் இருப்பர். மேலும் அந்தப் பிள்ளைகளிலிருந்தே பலர் அஹ்மதிய்யத்தில் இணைபவராகவும் இருப்பர்.

அதேபோன்று ஆக்ஸ்பெர்க் என்ற மற்றொரு நகரத்தில் பள்ளிவாயில் திறப்பு விழா நிகழ்ந்தது. அது பெரிய நகரமாக இருந்த காரணத்தால் அங்கிருந்து அதிகமான கல்வியறிவு பெற்ற மக்களும் வந்திருந்தனர். அரசியல்வாதிகளும் வந்திருந்தனர். அதில் ஒரு விருந்தினர் தனது தாக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்: தற்போது இங்கு தரப்படும் தூதுச் செய்தி மிகவும் அழகுவாய்ந்த தூதுச் செய்தியாகும். எனது ஆசை என்னவென்றால், தங்களின் இந்த தூதுச் செய்தி இஸ்லாமிய நாடுகளின் பெரும்பான்மை வரை சென்று சேர வேண்டும் என்பதாகும். அதன் மூலம் உலகில் அமைதி நிலை பெறும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் மூலம்தான் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஏற்படும். அன்னாருக்கு எதிராக தடைகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அன்னாருக்கு உதவி ஒத்தாசை செய்பவராக ஆக வேண்டும் என்ற சிந்தனை ஏனைய முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் ஏற்பட்டால் நன்றாக இருக்கும்.

ஒரு ஜெர்மனிய பள்ளி ஆசிரியை தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: இஸ்லாம் தொடர்பாக எனது பள்ளி மாணவர்களின் கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாமல் இருந்து வந்தது. ஏனென்றால் மீடியாக்களில் கூறப்பட்ட விஷயங்கள் அனைத்தும் இஸ்லாத்திற்கு மிகவும் எதிரானவையாகவே இருந்தன. இன்று இந்த நிகழ்ச்சியில் அஹ்மதிய்யாக ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவிலிருந்து எனக்கு எந்த அளவிற்கு விஷயங்கள் கிடைத்துள்ளதென்றால் இனி நான் எனது மாணவர்களுக்கு உண்மையான இஸ்லாத்தை பற்றி கூற முடியும்.

அடுத்து, ஒரு பெண்மணி கூறுகின்றார்: உங்கள் கலீஃபாவின் சொற்பொழிவை செவிமடுத்தது எனது உள்ளத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாத்தின் போதனைகள் இவ்வளவு அழகு வாய்ந்தவை என்பது எனக்கு இதற்கு முன் தெரியாமல் இருந்தது. இவ்விஷயங்களை செவிமடுத்த பிறகு எனது உள்ளத்தில் இந்த கேள்வி எழுகின்றது. இவ்வளவு அழகுவாய்ந்த போதனைகளாக இஸ்லாத்தின் போதனைகள் அமைந்த பின்னரும் இஸ்லாம் மார்க்கம் ஏன் இவ்வளவு அவப்பெருக்கு ஆளாகி உள்ளது. உங்களது இஸ்லாம் பரவி அனைத்து மக்கள் வரை சென்று சேர வேண்டும் என நான் பிரார்த்தனை செய்கிறேன்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஒரு பேராசிரியர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறிய விஷயங்கள் உண்மையிலேயே உங்களது தூதுச் செய்தியாக இருக்கும் என்றால், உங்களுக்கு பெரிய வெற்றிகள் கிடைக்கும். அவரைப் பற்றி ஒருவர் எழுதுகின்றார்: அவர் பல்கலைக்கழகத்தில் கண்காட்சி நடத்துவதற்கு நமக்கு ஆலோசனை வழங்கினார். அதன் மூலம் ஜமாஅத்தின் தூதுச் செய்தி அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று அவர் விரும்பினார்.

ஒரு விருந்தினர் கூறினார்: இன்று நமக்கு இரண்டு விஷயங்கள் தெளிவாக்கப்பட்டன. இன்று நம் அனைவருக்கும் அதற்கான அதிகமான தேவை உள்ளது. மார்க்கரீதியில் மட்டுமல்லாது உலகியல் ரீதியான பிரச்சனைகளுக்கும் தீர்வு கூறப்பட்டது. நாம் அனைவரும் வெளிப்படையாகவும், ஒன்றுபட்டும் இருந்து வந்தால் நமக்கிடையிலான அச்சங்கள் அனைத்தும் அகன்று விடும்.

மேலும் மற்றொரு விருந்தினர் கூறினார்: நான் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகி விட்டேன். உலகம் முழுவதிலும் இஸ்லாம் வெறுப்பிற்கான போதனை வழங்குகின்றது என கூறப்படுகின்றது. ஆனால் இங்கு முஸ்லிம்கள் அதற்கு நேர்மாற்றமாக அமைதியைப் பற்றிய போதனையை வழங்குகின்றனர்.

ஒரு விருந்தினர் கூறினார்: இஸ்லாம் எந்த அளவிற்கு சமத்துவத்தை வலியுறுத்துகின்றது என்பதை சொற்பொழிவிலிருந்து நான் அறிந்து கொண்டேன். இது எனக்கு ஜமாஅத்துடன் நிகழும் முதல் சந்திப்பாகும். மிகவும் அமைதி நிறைந்த ஆறுதலான அமர்வாக அது இருந்தது. எனவே எனக்கு இதனால் ஆர்வம் அதிகமாகி விட்டது. உங்கள் பள்ளிவாயிலை எதிர்காலத்தில் சுற்றிப் பார்க்க வேண்டும். இன்டர்நெட்டிலும் உங்களைப் பற்றி மேலும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு அதிகரித்துள்ளது.

ஒரு பெண் மருத்துவர் கூறுகின்றார்: சொற்பொழிவு என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. உள்ளத்தின் ஆழம் வரை தாக்கத்தை ஏற்படுத்தும் சொற்பொழிவாகும். குறிப்பாக அன்பு மற்றும் அமைதிக்கான தூதுச் செய்தி தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. நம்மில் ஒவ்வொருவரும் இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப தத்தமது அண்டை அயலாரை கருத்தில் கொள்ள முயன்றால் உலகம் பல மடங்கு அழகுவாய்ந்ததாக ஆகி விடும்.

மற்றொரு பெண் கூறுகின்றார்: அண்டை அயலாரின் மீதான உரிமைகளின் பக்கம் கவனமூட்டியது எனக்கு குறிப்பாக மிகவும் பிடித்திருந்தது. நாம் இந்த தூதுச் செய்தியில் ஒரு பங்கு அளவிற்கு செயல்பட்டால் கூட உலகம் முன்பை விட பல மடங்கு அமைதி நிறைந்ததாகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும் மாறி விடும்.

காவல்துறையுடன் தொடர்பு கொண்ட துருக்கியைச் சார்ந்த ஒரு விருந்தினர் கூறுகின்றார்: இன்றைய நிகழ்ச்சி மற்றும் தங்களின் சொற்பொழிவு போன்றவற்றால் இன்று நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இதேபோன்று நீங்கள் எல்லா இடங்களிலும் இஸ்லாத்தின் போதனைகளை வழங்கிக் கொண்டே சென்றால், விரைவில் நீங்கள் பெரும் வெற்றி பெறுவீர்கள். நான் காவல்துறையைச் சார்ந்தவன். நான் இதுபோன்ற மிகவும் பண்பட்ட ஏற்பாட்டை எங்கும் கண்டதில்லை. உங்களது ஏற்பாடுகளிலிருந்து அதிகமான விஷயங்களைக் கற்றுக் கொண்டுள்ளேன்.

பள்ளிவாயில் அடிக்கல் நாடு விழா நடைபெற்ற ரோன்ஹேமைச் சார்ந்த ஒரு விருந்தினர் கூறுகின்றார்: எங்களுக்கு இங்கு வருகை தந்ததனால் மிகவும் உளப்பூர்வமான மகிழ்ச்சி ஏற்பட்டது. கிறிஸ்தவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. ஆனால் அங்கு எனக்கு இதுபோன்ற நம்மவர் என்ற உணர்வு ஏற்பட்டதில்லை. இது தொடர்பாக உங்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் அதிகமாக கற்றுக் கொள்ள முடியும்.

கிறிஸ்தவர்கள் நிறைய கற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக நல்லொழுக்கத்தை உங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரு கிறிஸ்தவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் மிகப்பெரிய விஷயமாகும். எனவே, நமது இளைஞர்களிடம் எந்த வகையிலும் வெட்கமும், தாழ்வு மனப்பான்மையும் ஏற்படக் கூடாது. நாம் முஸ்லிம்கள் என்பதை மறைக்க வேண்டிய எந்த அவசியமுமில்லை மாறாக, மிகவும் வெளிப்படையாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகிற்கு கூற வேண்டும்.

அடுத்து ஒரு விருந்தினர் கூறுகின்றார்: கலீஃபா மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகும் வகையில் நமக்கு தற்போதைய உலகின் சூழ்நிலைகளை நமக்கு தெரிவித்துள்ளார்கள். குறிப்பாக இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையை நமக்கு தெளிவு –படுத்தினார்கள். நான் முதன்முறையாக ஜமாஅத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன். ரோன்ஹேம் நகரத்தில் ஜமாஅத்திற்கென ஓர் இடத்தை அமைத்துக் கொண்டதாகவே நான் கருதுகிறேன். விரைவில் இங்கு பள்ளிவாயில் கட்டி முடிக்கப்பட்டு, நான் அதனை பார்வையிட வேண்டும் என்ற ஆவல் எனக்கு உள்ளது. ஒன்று எதிர்ப்பு வருகின்றது. அந்த எதிர்ப்பிற்கு மத்தியில் நமது தூதுச் செய்தி சென்று சேரும்போது விரைவில் பள்ளிவாயில் கட்டப்பட வேண்டும் என்ற ஆவல் மக்களுக்கு ஏற்படுகின்றது. விருந்தினர் ஒருவர் வருகை தந்திருந்தார். அவருக்கு பெண்களின் உரிமை மற்றும் அமைதி போன்ற விவகாரங்களில் சில அச்சங்கள் இருந்தன. உங்களுடைய கலீஃபா அமைதியை நிலைநாட்ட என்ன முயற்சி செய்கின்றார்? என்ற கேள்வியும் அவருக்கு இருந்தது. எனது சொற்பொழிவைக் கேட்ட பிறகு அவர் கூறினார். எனது உள்ளத்தில் இருந்த அனைத்து விஷயங்களுக்கும் சொற்பொழிவில் பதில் இருந்தது. எனது அனைத்து ஐயங்களும் தீர்ந்து விட்டன. நீங்கள் அமைதியின் தூதுவர்கள் ஆவீர்கள். ஏனைய அனைத்து முஸ்லிம்களும் இந்த போதனையின்படி செயலாற்ற வேண்டும். நான் எனது வட்டத்தில் உங்களது தூதுச் செய்தி பரவுவதற்கு முழு முயற்சி செய்வேன் என்றும் அவர் கூறினார்.

சிரியாவைச் சார்ந்த ஒரு நண்பர் கூறினார்: முஸ்லிம் அல்லாத மக்கள் இங்கு வருகை தந்து பிரச்சனை ஏதும் ஏற்படுத்தி விடக்கூடாதே என்ற அச்சம் எனக்கு இருந்தது. ஆனால் நீங்கள் ஏனைய அனைத்து முஸ்லிம்களை விடவும் மிகவும் சிறப்பான முறையில் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைத்தீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் இன்று இஸ்லாத்தின் அசல் போதனைகளை எடுத்துரைத்தார். இது நான் கலந்து கொண்ட ஜமாஅத்தின் முதல் நிகழ்ச்சியாகும். இனி நான் இன்னும் ஆராய்வேன். ஒருநாள் நானும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விடக் கூடும். இங்கு நான் வருவதற்க முன் அஹ்மதிகளின் குர்ஆன் வேறுபட்டதாகும் என எனக்கு கூறப்பட்டது. ஆனால் எனக்கு கூறப்பட்ட விஷயம் தவறென இன்று நிரூபணமாகி விட்டது.

ஒரு விருந்தினர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வது எனக்கு இதுவே முதன் முறையாகும். இங்கு வருவதற்கு முன் எனக்கு ஜமாஅத்தைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் இப்போது நான் தாக்கத்திற்கு ஆளாகி விட்டேன். பெரும்பாலும் பள்ளிவாயில்கள் தீவிரவாதத்துடன் தொடர்புடையதாகவே கூறப்படுவதுண்டு. ஆனால் அது உண்மையல்ல என இன்று எனக்கு தெரிய வந்துள்ளது. இங்கு ஒரு பள்ளிவாயில் கட்டி முடிக்கப்படவுள்ளது என்பதை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பள்ளிவாயில் அமைதிப் பூங்காவாகத் திகழும்.

ஒரு பெண்மணி கூறினார்: நான் முதன் முறையாக ஜமாஅத் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்கிறேன். மிகவும் அமைதி நிறைந்த சூழலாக உள்ளது. அமைதியைப் பற்றியும், அன்பைப் பற்றியுமே எடுத்துரைக்கப்பட்டது.

மார்பர்க் என்றவொரு நகரம் உள்ளது. அங்கு பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு பெண் விருந்தினர் கூறுகின்றார்: அண்டை அயலார் தொடர்பான தூதுச் செய்தி என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு கிறிஸ்தவர் என்ற முறையில் எனது ஆசை என்னவென்றால், கிறிஸ்தவ மார்க்கமும் இந்தப் போதனையைப் பின்பற்ற வேண்டும்.

அடுத்து, மற்றொரு விருந்தினர் கூறுகின்றார்: மார்க்கத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றி சொற்பொழிவில் தாங்கள் எடுத்துரைத்த விஷயம் மிகவும் அழகுவாய்ந்ததாகும். மேலும் உங்கள் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான அந்தஸ்து மற்றும் உரிமைகளில் உள்ள சமநிலை எனக்கு மிகவும் பிடித்துள்ளது.

லார்டு மேயர் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: வேதனை என்னவென்றால், முஸ்லிம்களின் மீது வீண்பழி சுமத்தப்படுகின்றது. எந்த அளவுக்கு என்றால் அதற்கு பதிலளிக்கும்போது முஸ்லிம்களுக்கு ஆதாரத்தை எடுத்து வைக்கும் அவசியம் ஏற்படுகிறது. ஆனால் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த ஒருவர் அல்லது ஒரு கிறிஸ்தவர் ஒரு அக்கிரமமிக்க காரியம் செய்தால் உதாரணமாக நார்வே சம்பவம் உள்ளது. அங்கு ஒருவர் கிறிஸ்தவத்தின் பெயரால் கொலை செய்தார். ஆனால் அதற்கு அவரது கிறிஸ்தவ மார்க்கமே காரணம் என எவரும் கூறுவதில்லை.

ஒரு விருந்தினர் ஜூலியா கூறுகின்றார்: மிக அழகிய முறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இடம்பெற்ற தங்களின் சொற்பொழிவில் அடியார்களின் உரிமை நிறைவேற்றப்படவில்லை என்றால் இறைவணக்கத்திற்கான எந்தப் பயனும் இல்லை என்ற கருத்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் இங்கு வருவதற்கு முன் இஸ்லாம் அடிப்படைவாதம் மற்றும் தீவீரவாதத்திற்கான போதனையை வழங்கக் கூடியதாக இருக்கக் கூடும் என நான் எண்ணியிருந்தேன். ஆனால் இன்றைய நிகழ்ச்சியானது இஸ்லாத்தைப் பற்றி எனக்கு இருந்த எதிர்மறை சிந்தனைகளிலிருந்து என்னை தூய்மையாக்கி விட்டது. இஸ்லாத்தின் அமைதி மற்றும் அன்பின் தூதுச் செய்தி மிக அழகிய முறையில் எடுத்துரைக்கப்பட்டது.

அடுத்து ஒரு பெண்மணி கூறுகின்றார்: இன்றைய இருள் சூழ்ந்த நாட்களில் இந்த தூதுச் செய்தி வானத்து விளக்காக உள்ளது. மனிதத்துவத்தைப் பற்றி தாங்கள் பேசிய போது எனது கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

அடுத்து, மற்றொரு நண்பர் கூறுகின்றார்: இஸ்லாத்தின் சமத்துவ போதனைகள் எடுத்துரைக்கப்பட்ட அந்த சொற்பொழிவின் பகுதியில் நான் மிகவும் தாக்கத்திற்குள்ளானேன். இதுபோன்று விரிவாக சமத்துவத்திற்கான போதனைகளை எடுத்துரைக்கும் வேறெந்த மார்க்கத்தையும் நான் அறியேன். மற்ற மார்க்கங்கள் தத்தமது குறுகிய வட்டங்களுள் நின்று விட்டன. ஏனைய மார்க்கங்களுடன் தொடர்பு கொள்ளக் கூட முடியவில்லை.

அடுத்து ஒரு அரசாங்க பெண் அதிகாரி கூறுகின்றார்: நான் ஒரு கிறிஸ்தவர் என்ற ரீதியில் இஸ்லாம் கூறுகின்ற அண்டை அயலாருக்கான உரிமை தொடர்பாக விஷயங்கள் எனக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மேயர் அலுவலகத்தின் ஒரு ஊழியர் கூறுகின்றார்: என்னென்ன விஷயங்களை செவிமடுக்க வேண்டுமென்ற ஆசையுடன் நான் இன்று இங்கு வந்தேனோ அவை அனைத்தும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

வயது முதிர்ந்த விருந்தினர் ஒருவர் கூறினார்: நான் அங்கு வருவதற்கு முன் அவர் கூறினார். எனக்கு 6.30 மணிக்கு ஒரு அப்பாயின்ட்மெண்ட் உள்ளது. எனவே நான் சென்று விடுவேன் என்றார். ஆனால் நிகழ்ச்சி ஆரம்பமானதும் ஹெட்ஃபோனை மாட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார். எனது சொற்பொழிவுக்கிடையில் எனக்கு நேரமாகி விட்டது; நான் கிளம்புகிறேன் என்று கூறினார். ஹெட்ஃபோனை கழற்றி விட்டு எழுந்தும் விட்டார். ஆனால் என்னவோ தெரியவில்லை. மீண்டும் அமர்ந்து முழு சொற்பொழிவையும் கேட்டு விட்டுச் சென்றார். சில சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் இப்படித்தான் நடக்கின்றது. நாமோ சிறிய முயற்சியையே செய்கிறோம். ஆனால் அல்லாஹ் சிலருக்கு கண்டிப்பான முறையில் தூதுச் செய்தியைக் கேட்க வைத்து விடுகிறான். இதுபோன்ற பல மக்கள் இருந்தனர். நான் ஒரு சிலரின் உதாரணத்தையே கூறுகிறேன்.

அதுபோன்று, ஃபின்லாந்தைச் சார்ந்த ஒரு பெண்ணி தனது 9 வயது மகனுடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் கூறினார்: நான் எனது சிறிய மகனை என்னுடன் அழைத்து வந்துள்ளேன். எனது மகனின் காதுகளில் உங்களுடைய குரல் ஒலிக்க வேண்டும். நீங்கள் எடுத்து வைக்கும் போதனைகளை அவன் சற்று கற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது உளமார்ந்த ஆசையாகும். உங்களைப் போன்று இறைவனின் தூய நல்லடியார்களாக அவன் மாறி விட வேண்டும் என்றும் உங்களின் சொற்பொழிவைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி விட்டேன். இதுவே என்னைப் பொருத்தவரையில் உண்மையான இஸ்லாம் ஆகும். மற்ற அனைத்து முஸ்லிம்களும் இவர்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அந்தப் பெண்மணி கூறினார். குறிப்பாக சமத்துவம் மற்றும் அண்டை அயலாரின் மீதான கடமைகள் பற்றிய இஸ்லாமிய போதனைகள் எடுத்துரைக்கப்பட்ட போது, நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானேன். உங்களுடைய இந்த தூதுச் செய்தி ஒருபோதும் தவறாக இருக்கவே முடியாது என்றும் கூறினார். உங்கள் ஜமாஅத்தைச் சார்ந்த இமாம் ஒருவரோ அல்லது வேறு யாரும் எனது இந்த 9 வயது மகனுக்கு குர்ஆன் ஓதக் கற்றுத்தர வேண்டும். அவன் திருக்குர்ஆன் ஓதி நல்லியல்பு கொண்ட நபராக மாற வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஆக, இந்த அளவிற்கு கூட தாக்கம் ஏற்பட்டு விடுகின்றது. இது மனிதனின் வேலையா என்ன? நிச்சயமாக அல்லாஹ்வே அவர்களின் உள்ளங்களில் இந்த மாற்றத்தை ஏற்படுத்துகின்றான். இனி இதிலிருந்து பயனடைந்தவாறு மக்களை இறைவனின் பக்கம் கொண்டு வர முயற்சி செய்வது நமது பணியாகும். ஆனால் அதற்கு முன் நாம் நம்மையும் கருத்தில் கொள்ள நேரிடும். நாமும் மிக அதிகமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயல வேண்டும்.

ஒரு பெண்மணி கூறினார்: அண்டை அயலார் தொடர்பான இஸ்லாத்தின் போதனை எனக்கு மிகவும் பிடித்துள்ளது. கிறிஸ்தவராக இருந்தபோதிலும் எங்களது மார்க்கத்திலும் அதுபோன்ற போதனை இருந்திருந்தால் நன்றாக இருந்திக்கும் என்றார்.

மற்றொரு பெண்மணி கூறுகின்றார்: பெண்களின் உரிமைகளைப் பற்றி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிகச் சிறந்த முறையில் எடுத்துரைத்தார்கள். இன்றைய மேற்கத்திய கலாச்சாரத்தில் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இதுபோன்ற எண்ணற்ற நல்ல தாக்கங்கள் உள்ளன. நான் அவற்றில் சிலவற்றையே எடுத்துக் கூறியுள்ளேன்.

இதுபோன்று பிரஸ் மீடியாவில் கவரேஜ் மிக அதிகமாக செய்யப்பட்டது. பைத்துல் ஆஃபிய்யத் பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது டி.வி சேனல் மற்றும் 2 பத்திரிகைகள் கவரேஜ் செய்தன. அந்த டி.வி சேனல் தேசிய சேனல் ஆகும். இதில் 22, 23 இலட்சம் பார்வையாளர்கள் உள்ளனர்.

அதேபோன்று ஆக்ஸ்பர்கிலுள்ள மஸ்ஜித் பைத்துந் நஸ்ர் பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது மூன்று டி.வி சேனல்களும், 3 ரேடியோ சேனல்களும், 18 செய்தித்தாள்களும் செய்திகளை வெளியிட்டன. இது பெரிய நகரமாகும். ரேடியோ சேனல் செய்தித்தாள்கள் வாயிலாக 3 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வரை பள்ளிவாயில் திறப்பு விழா செய்தி மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்ததாக கூறப்படுகிறது.

அடுத்து, ஜெர்மனியின் இரு நகரமான ரோன்ஹேம் மற்றும் மார்க்பேர்க்கில் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடந்தத. இங்கும் டி.வி சேனல்கள் மற்றும் 22 செய்தித்தாள்கள் செய்திகளை வெளியிட்டன. டி.வி சேனல் மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக பள்ளிவாயில் அடிக்கல் நாட்டு விழா செய்தி சுமார் 2 கோடி பேர் வரை சென்று சேர்ந்துள்ளது. 54 டி.வி சேனல்கள் மற்றும் செய்தித்தாள்களில் 136 செய்திகள் பள்ளிவாயில் தொடர்பாக வெளி வந்துள்ளன. ஒரு கணக்கீட்டின் அடிப்படையில் ஊடகங்களின் இந்த செய்திகள் வாயிலாக 39 மில்லியன் மக்கள் வரை ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனி ஜமாஅத்தின் தப்லீக் துறை நன்கு சுறுசுறுப்பாக செயல்படுகிறது. மற்ற அமைப்புகளும் ஆண்டு முழுவதும் நல்ல பணி செய்கின்றன. நடப்பாண்டில் மில்லியன் கணக்கில் ஜமாஅத்தின் செய்தி சென்று சேர்கின்றது. அதன் காரணமாக அங்கு எதிர்ப்பும் ஏற்படுகிறது. அது அதிகரிக்கவும் செய்கின்றது. குறிப்பாக கிழக்கு ஜெர்மனியில் எதிர்ப்பு உள்ளது.

ஆனால் நாம் எதிர்ப்பிக்கிடையிலும் தூதுச் செய்தியை சென்று சேர்க்க வேண்டும். பணியைத் தொடர வேண்டும் – இன்ஷா அல்லாஹ். நான் சுற்றுப் பயணத்தில் செல்லும் நாட்டின் நிலைமைகள் பற்றி குத்பாக்களில் எடுத்துரைப்பதுண்டு. ஆனால் இங்கு யூ.கே –விலும் அல்லாஹ்வின் அருளால் அந்தப் பணி நடைபெறுகின்றது. இங்கு சிறப்பான சுற்றுப் பயணமாக அமைவதில்லை. எனவே அதுபற்றி எடுத்துரைக்கப்படுவதில்லை. எனவே, இங்கு பணிகள் எதுவும் நடைபெறவில்லை என சிலர் நினைக்கலாம். ஆனால் இங்கு மிகவும் பரந்த அளவில் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்பும் பணி பல்வேறு துறைகள் ரீதியாக நடைபெறுகின்றன. ஜமாஅத் அளவிலான தப்லீக் துறையும், கிளை அமைப்புகளும் அல்லாஹ்வின் அருளால் இந்தப் பணிகளைச் செய்கின்றன. மேலும் குறிப்பாக Life of Muhammad என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாழ்க்கையைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் நூல் யூ.கே –வில் மிக அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. ஏராளமான மக்கள் வரை கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. அதில் அன்ஸாருல்லாஹ் அமைப்பு நன்கு பணியாற்றி உள்ளது. அதேபோன்று ஏனைய புத்தகங்களும் இங்கு பெரிய அளவில் வெளியிடப்பட்டு பரப்பப்பட்டுள்ளது. அதன் மூலம் பெரிய அளவில் வெளியிடப்பட்டு பரப்பப்பட்டுள்ளது. அதன் மூலம் பெரிய அளவில் ஜமாஅத்தின் அறிமுகமும் ஏற்பட்டுள்ளது. இன்னும் சொல்வதென்றால், ஏனைய உலக நாடுகளிலும் ஜமாஅத்தின் அறிமுகம் இங்கு நடைபெறும் பல தலைமையக நிகழ்ச்சிகள் மூலம் ஏற்பட்டுள்ளது. இங்கு யூ.கே –வைச் சார்ந்த அஹ்மதிகள் ஏனைய நாடுகளின் ஜமாஅத் நிகழ்ச்சிகளைப் பெருமிதத்துடன் பார்க்கலாம். ஆனால் அங்கு அதுபோன்ற பணிகள் நடைபெறவில்லை என்ற எண்ணம் கொள்ள வேண்டாம். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் அதிகமாக கலந்து கொள்ளாத நபர்கள் மற்ற ஜமாஅத்துகளை விட நாம் பின்தங்கியுள்ளோம் என எண்ணலாம். ஆனால் அல்லாஹ்வின் அருளால் இங்கும் கூட நல்ல முறையில் பணிகள் நடைபெறவே செய்கின்றன. கடந்த மாதம் மார்ச்சில் இங்கு அமைதிக் கருத்தரங்கு நடைபெற்றது. அதன் மூலம் யூ.கே –வில் மட்டும் அல்ல. உலகம் முழுவதிலும் பெரிய அளவில் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. இங்கு அதனைப் பற்றிய குறிப்புகள் ஒருபோதும் கூறப்படவில்லை. எனவே அதனைப் பற்றி இன்று கூற வேண்டும் என நான் கருதுகிறேன்.

ஒரு தேவாலய நிர்வாகி கூறுகின்றார்: (அவர் அமைதிக் கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்தார்.) மிகவும் நல்ல அருமையான தூதுச் செய்தியாக இருந்தது. ஒற்றுமையைப் பற்றிய தூதுச் செய்தியாக இருந்தது. இன்றைய சூழலில் அதற்கு மிகவும் அதிக தேவை உள்ளது. ஜமாஅத்தின் இமாம் சாஹிப் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தைக் குறிப்பிட்டு பல்வேறு தரப்பட்ட மார்க்கத்தைச் சார்ந்த மக்கள் தங்களுக்கிடையிலுள்ள ஒருமித்த கருத்துக்களில் ஒன்றுபட வேண்டும். இதன்படி செயல்படுவது சாத்தியமான காரியமாகும். மார்க்கமற்ற மக்களையும் அதில் ஒன்றிணைக்க முடியும். இன்று எனக்கு இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்திற்கிடையேயான ஒருமித்த கருத்தைப் பற்றிய அறிவு கிடைத்தது. இறைவணக்கத்தைப் பற்றிய இந்த விஷயமும் எனக்கு பிடித்திருந்தது. ஐவேளை தொழுகை அவசியமாகும். ஆனால் அத்துடன் படைப்பின சேவை இல்லை என்றால் அந்த இறைவணக்கத்திற்கு எந்தப் பயனுமில்லை.

அடுத்து, ஒரு Nurse Phyiona சாஹிபா கூறுகின்றார்: இஸ்லாமிய மார்க்கத்தை மக்கள் சரிவர புரியவில்லை என்பதை ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். தீவிரவாதிகள் தவறான முறையில் இஸ்லாத்திற்குப் பின்னால் ஒளிந்து கொள்கின்றனர். இலண்டனில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலுக்கு ஜமாஅத்தின் இமாம் சாஹிப் செற்பொழிவின் துவக்கத்தில் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்கள். அந்த தாக்குதலுக்கும், இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும்

இல்லை என இமாம் அவர்கள் கூறியதும் எனக்குப் பிடித்திருந்தது. இமாம் அவர்கள் வெறும் கேள்வியை மட்டும் முன் வைக்கவில்லை. அதற்குரிய தீர்வையும் கூறினார்கள். உதாரணமாக, இமாம் அவர்கள் ஆயுத விற்பனை பற்றியும் கூறினார்கள். அத்துடன் நாம் ஒருவர் மற்றவருக்கு மதிப்பளித்தவாறு ஒருவர் மற்றவரின் கருத்தை செவிமடுக்க வேண்டுமெனவும் கூறினார்கள்.

அடுத்து வந்திருந்த ஒரு விருந்தினர் கூறினார்: கடந்த நாட்களில் West Manster –ல் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலுக்கு இஸ்லாம் காரணமல்ல என்று இன்று நான் அறிந்து கொண்டேன். மாறாக அது ஒரு தனிநபரின் குற்றமாகும். அவன் அமைதியை விரும்பும் மார்க்கத்திற்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறான். அந்த தீவிரவாதி ஒரு பைத்தியக்காரன் ஆவான். அவன் உண்மையான முஸ்லிம் கிடையாது என்பது இன்று எனக்கு நிரூபணமாகி விட்டது. உங்களின் கலீஃபா மிகத் தெளிவாகக் கூறி விட்டார். எல்லா வகையான தீவிரவாதமும் தவறாகும். அதனை திருக்குர்ஆன் வசனங்களின் ஒளியில் நிரூபணம் செய்தார். இன்றைய நாளை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் நாளைய தினத்தையும் கவனத்திற்கு கொள்ள வேண்டும் என்ற கலீஃபாவின் கூற்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நம்மைப் பிரிக்கின்ற சுவரை எழுப்பாமல், நம்மை இணைக்கின்ற பாலத்தை நாம் கட்ட வேண்டும் என்ற கலீஃபாவின் கூற்றும் எனக்கு பிடித்த கூற்றுகளாகும்.

ஒரு தேவாலயத் தலைவர் கூறுகின்றார்: சொற்பொழிவை நான் கேட்டேன். அது வழிகாட்டும் ஒளி விளக்காகும். இஸ்லாம் மகத்துவமிக்க அமைதியின் மார்க்கம் என்பதை உணர்த்தியது. பேச்சு வார்த்தையை முன்னெடுப்பது தொடர்பான தூதுச் செய்தி மிகவும் அருமை மற்றும் அவசியமானதாகும். பகைமையை அதிகரிப்பதற்குப் பகரமாக ஒருவர் மற்றவரின் பலதரப்பட்ட கருத்துக்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் சகிப்புத்தன்மை குறைந்து வருகின்றது என்ற கலீஃபாவின் கூற்று மிகச் சரியானதாகும்.

ஒரு நிறுவனத்தின் டைரக்டர் இங்கு வந்திருந்தார். அவர் ஒரு பெண்மணியாவார். அவர் கூறினார்: ஒருமுறை உங்களது நான்காவது கலீஃபாவைச் சந்தித்துள்ளேன். எனவே உங்களது ஜமாஅத்தைப் பற்றி ஓரளவு எனக்கு தெரியும். இன்றும் நான் கலீஃபாவைச் சந்தித்தேன். நான் செவிமடுத்த இந்த சொற்பொழிவிற்கான தேவை இன்று உலகில் உள்ளத. எல்லா விஷயத்திற்கும் இஸ்லாத்தின் மீது பழிபோடுவது உகந்ததல்ல. இன்றைய உலகின் ஏராளமான பிரச்சனைகள் மேற்கத்திய நாடுகளால் உருவாக்கப்பட்டதாகும் என்று கலீஃபா கூறியது சரியானதாகும். ஆயுத விற்பனை பற்றி கலீஃபா கூறியதும் எனக்கு பிடித்திருந்தது. இந்த விஷயத்தில் நல்லொழுக்கம் முடிந்து விடுகின்றது. வியாபார நன்மைகளை மட்டுமே கருத்தில் கொள்ளப்படு –கின்றன. நமது அரசாங்கம் இந்த விஷயத்தைக் குறித்துக் கொண்டு உலகின் எதிர்காலம் தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் வார்த்தைகளைக் கவனத்தில் கொள்ளும். அன்னாரின் வார்த்தைகள் மற்றும் துஆவினால் நாம் பெரும் தாக்கத்திற்கு உள்ளானேன். நாம் நமக்குப் பின்னால் அழகிய உலகத்தை விட்டுச் செல்ல வேண்டும். நாம் நமக்குப் பின்னால் ஊனமுற்ற குழந்தைகளின் உலகை விட்டுச் செல்பவர்களாக நாம் இருந்து விடக் கூடாது என்ற கலீஃபாவின் வார்த்தை என்னைப் பெரிதும் பாதித்தது.

இங்கு ஜமாஅத்திற்கும் நான் கவனமூட்டிக் கொள்கிறேன். இன்றைய நாட்களில் உலகின் நிலை படுமோசமாகிக் கொண்டே செல்கின்றது. துஆவிற்கான தேவை அதிகமாக உள்ளது. வல்லரசுகளும், சிறிய நாடுகளும் போர் மோகத்தில் பீடிக்கப்பட்டுள்ளனர். எந்த தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் கருத்துக் கூறுபவர்கள் உலகப்போரை மிகத் தொலைவில் இருப்பதாகக் கருதினார்களோ அத்தகைய நபர்களும் கூட உலகப் போருக்கான வாய்ப்பினை மறுக்க முடியாது. போருக்கான அதிக வாய்ப்புள்ளது என கூறத் தொடங்கி விட்டனர்.

அடுத்து போருக்கான சூழல் நிலவுகிறது. உதாரணமாக, அமெரிக்கா மற்றும் கொரியாவிற்கு இடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது. சீனா அதனைத் தடுப்பதற்கு பெரும் முயற்சி செய்து வந்தாலும் ஒருவர் மற்றவருக்கு அணு ஆயுத தாக்குதலுக்கான மிரட்டல் விடுத்து வருகின்றனர். அங்குமிங்குமாக அணிகள் உருவாகி வருகின்றன. அதேபோன்று முஸ்லிம் தலைவர்களும் அநீதியிழைக்கின்றனர். எப்படி இருப்பினும் போருக்கான மைதானம் விரிவடைந்து கொண்டே செல்கிறது. அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்கட்டும் என நாம் துஆ செய்ய வேண்டும்.

அதேபோன்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் (ரஹி) அவர்கள் அணு அயுதப் போரைக் கருத்தில் கொண்டு ஹோமியோபதி மருந்து ஒன்றையும் கூறியிருந்தார்கள். அதனை ஜமாஅத் குறைந்தது 6 வாரத்திற்காவது பயன்படுத்த வேண்டும். முதல் வாரம் ஒரு மருந்து, அடுத்த வாரம் இரண்டாவது மருந்து என Carcinosin & Rdaium Bromaide – உட்கொள்ள வேண்டும்.

இதேபோன்று மற்றொரு நபரின் நல்ல தாக்கம் ஒன்றையும் கூறி விடுகிறேன். போர்ச்சுக்கல் நாட்டைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் காலு மோரியஸ் கூறுகின்றார்: நீதி மற்றும் அமைதி இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடைய வார்த்தைகளாகும் என்பது இன்று நிரூபணமாகி விட்டது. இரண்டிற்கும் ஒரேபொருள் தான். ஒன்று இல்லாமல் மற்றொன்று கிடைக்காது. உலகில் நீதியின்மை நிலவுகிறது. அதன் காரணமாகவே அமைதியின்மையும் நிலவுகின்றது. முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்றும் போர்களுக்கு பொறுப்பாளிகள் என நாம் குற்றம் சுமத்திவிட முடியாது. மாறாக அந்தப் பிரச்சனையின் ஆணிவேர் வரை நாம் சென்றடைய வேண்டும். உலகில் நீதியின்மை உள்ளது. இஸ்லாமோ ஃபோபியா – இஸ்லாத்தைக் குறித்த வெறுப்பு பற்றி ஜமாஅத்தின் இமாம் பேசியதில் எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. மக்கள் இதனை புறக்கணித்து வருகின்றனர். நாம் நெருப்பில் எண்ணெய் ஊற்றக் கூடாது. மாறாக ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். எள்ளிநகையாடக் கூடாது என்ற தங்களின் கூற்று முற்றிலும் சரியானதாகும்.

அதேபோன்று போர்ச்சுக்கல் நாட்டின் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் கூறினார்: கலீஃபாவின் கூற்றுகள் ஆதாரங் –களின் அடிப்படையில் அமைந்திருந்தது எனக்கு மிகவும் பிடித்த விஷயமாகும். இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும் என்பதை திருக்குர்ஆன் சான்றுகளின் ஒளியில் அன்னார் தெளிவுபடுத்தி விட்டார்கள். மேலும் உலகியல் சான்றுகளின் ஒளியிலும் ஒவ்வொரு பிரச்சனைக்கும் இஸ்லாத்தின் மீது பழிபோடுவதும் ஆகுமானதல்ல என்பதையும் கலீஃபா அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். நாம் இன்றைய தினத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் எதிர்காலத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கலீஃபா அவர்கள் கூறியதும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இன்னோர் அரசியல்வாதி ஒருவர் கூறினார்: கலீஃபாவின் தூதுச் செய்தி உள்ளத்தை கவரக்கூடியது. போர் உறுதியானதாக தெரிகிறது. உலகப்போரை தவிர்க்கலாம் என்று குறைந்தபட்சம் கடந்த 70 வருடங்களாக நாம் கூறி வருகிறோம். ஆயினும் போர் ஆரம்பமாகி விட்டால் அதில் பங்கு பெறுவதிலிருந்து விலகி நிற்பது சாத்தியமல்ல என்ற கலீஃபாவின் கூற்றில் எனக்கு உடன்பாடு உள்ளது.

உலகளாவிய தொடர்புகளில் நீதியினை நிலைநாட்டுவது அவசியமாகும். இந்த தூதுச் செய்தியை இங்கிருந்து நான் எடுத்துச் செல்கிறேன் என்றார். நான் சிலவற்றை குறிப்பிட்டுள்ளேன். உள்ளபடியே பார்ப்பதாக இருந்தால் அந்த நிகழ்ச்சியில் 600 –க்கும் அதிகமான மக்கள் வந்திருந்தனர். அனைவரின் கருத்துகளுமே சிறந்ததாகும். இதன் மீடியா கவரேஜும் பெருமளவில் இருந்தது. Seated Press, BBC, Asian Network mail, New Statement, Stateman, ஜப்பானின் NSKY Channel, Sunday Times, ABC, கிரீஸின் ART Channel, Iceland -ன் தேசிய பத்திரிகை, South West Television, Sputnik போன்ற ஏறக்குறைய 20, 21 பிரஸ்கள் செய்திகளை வெளியிட்டன.

வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த சேனல்களில் ஆஸ்திரிய நாட்டு சேனலும் அடங்கும். 8 நிமிட அறிக்கையை ஒளிபரப்பினார்கள். அடுத்து கிரீஸ் நாட்டின் தேசிய சேனலும் செய்தி ஒளிபரப்பியது. Iceland நாட்டின் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது. இந்தியா டுடே சேனலும் செய்தி ஒளிபரப்பியது. இத்தாலி செய்தித்தாளும் வெளியிட்டது. அர்ஜென்டினா தேசிய செய்தித்தாளும், அமெரிக்காவின் செய்தித்தாளும், கனடா, ஸ்பெயின் நாட்டு இரண்டு செய்தித்தாள்கள் என இவ்வாறு ஏராளமான ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. சுமார் 9 மில்லியன் மக்கள் வரை இங்கு நடந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஜமாஅத் செய்தி வெளிநாடுகளில் சென்று சேர்ந்துள்ளது. போர்ச்சுக்கல் போன்ற நாட்டிலும் செய்தி வெளியானது. இங்கு நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கின் செய்தி பெரிய அளவில் வெளியானது. இந்த வகையில் இஸ்லாத்தின் போதனை உலகிற்கு தெரிய வந்துள்ளது. Social Media வாயிலாகவும் 3.8 மில்லியன் மக்களுக்கு செய்தி சென்று சேர்ந்துள்ளது. சுமார் 10,11 வெளிநாட்டு பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டிருந்தனர். ஜமாஅத் செய்தி பரவும்போது எதிர்ப்பும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் அதிகரிக்கின்றது. அல்ஜீரியாவில் கடந்த பல மாதங்களாக அதிக அளவில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களுக்காக துஆ செய்யுமாறு நான் கூறியுள்ளேன். அல்ஜீரியாவில் 24 ஆம் தேதி செமினார் நடக்க இருந்தது. அதில் அஹ்மதிய்யா ஜமாஅத் தனது கருத்தை எனக்கு அனுப்பித் தந்தால் அதனை அந்த செமினாரில் எடுத்துரைப்பேன் என அமைச்சர் ஒருவர் கூறினார். ஜமாஅத்தைப் பற்றி அறியவே அவர்கள் செமினார் நடத்தினார்கள். ஆனால் பிறகு அவர்கள் கூறினார்: ஜமாஅத்தைப் பற்றி அறிய வேண்டிய அவசியமில்லை. நாங்கள் முடிவெடுத்து விட்டோம் என்றனர். காதியானிகள் ஆங்கிலேயர்களின் கைக்கூலிகள் என்ற தலைப்பில் ஜமாஅத்திற்கு எதிராகவே பேசினர். பழைய குற்றச்சாட்டுகளையே இவர்கள் நம்மீது சுமத்தினர். நமது கருத்து அங்கு வாசித்துக் காட்டப்படவில்லை. அதனை படித்துக் காட்ட இருந்தவரிடம் அவர்கள் கூறினர். நீர் நல்ல அறிவு படைத்த மனிதராவீர். முதலில் நீரும் ஜமாஅத்திற்கு எதிராகவே பேசி வந்தீர். இப்போது ஜமாஅத்திற்கு ஆதரவாகப் பேசுகின்றீர் எனக் கூறப்பட்டது.

ஆக, எவ்வாறிருப்பினும் அவர்கள் செய்தியாளர் –களைச் சந்தித்தனர். வெளிநாட்டு ஊடகங்களிடம் கூறினர். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி நேர்மறையான சிந்தனை கொண்டுள்ளோம். அவர்களுக்கு எதிராக எங்கள் நாட்டில் எந்த அநீதியும் நடக்கவில்லை. நாட்டிற்கு எதிராகச் செயல்படும் ஒரு

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## கனடா பாராளுமன்றத்தில் பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு இருந்தது. அப்போது ஹுஸூர் அவர்கள் வழங்கிய முக்கிய போதனைகள்

**حُبُّ الْوَطَنِ مِنَ الْاِيْمَانِ நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும். இந்த தூதுச் செய்திக்கேற்ப செயல்பட்டால் நாட்டில் எந்தவொரு மோசமான நிலைமையும், தீங்கும் ஏற்படாது. அரசாங்கத்திற்கு எந்தக் கவலையும் இருக்காது. ஒவ்வொருவரும் நாட்டிற்காக நன்மையை நாடுபவராகவும் நன்றியுணர்வுமிக்கவராகவும் இருப்பர். எந்தவொரு கட்சியும் எந்தவொரு பிரிவும் நாட்டிற்கு எதிராக செயல்படாது. மேலும் நாட்டில் அமைதி நிலைநாட்டப்படும்.**

**ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும். மற்றவர்களது உரிமைகளைப் பறிக்கக் கூடாது. ஒவ்வொருவரும் மற்றவர்களது உரிமைகளைச் செலுத்தக்கூடியவராக இருந்தால் பிறகு சமுதாயத்தில் அமைதி ஏற்படும்.**

*18 அக்டோபர் 2016 -ல் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடாவின் பாராளுமன்றமான Parliament Hill -ற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு மிகவும் மகிமையுடன் பாராளுமன்றத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். ஹுஸூர் அவர்கள் பாராளுமன்றத்தில் உலகின் நிலைமைகள் மற்றும் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவை அறிஞர்களும் அரசியல்வாதிகளும் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ளவர்களும் மிகவும் விரும்பினர். மேலும் அவர்களுக்கு ஏற்பட்ட சிறந்த தாக்கங்களை வெளிப்படுத்தினர். இந்த நாளில் ஹுஸூர் அவர்களின் அன்றாட அலுவல்கள் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக்கூடியவையாக இருந்தன. இதுபற்றிய முழு விபரங்களை வாசகர்களுக்காக இனி வரும் சில இதழ்களில் பல பகுதியாக வெளியிடுகின்றோம். (ஆசிரியர்)*

### (இரண்டாம் பகுதி)

அதற்குப் பிறகு மேல்சபையின் இரு உறுப்பினர்களான செனட்டர் பீட்டர் பார்டர் அவர்களும், செனட்டர் கிராண்ட் மைக்கேல் அவர்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களைச் சந்திப்பதற்காக வந்திருந்தனர். மேல்சபையின் உறுப்பினரான பீட்டர் அவர்கள் மேல்சபையில் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் இருக்கின்றார். மேலும் மேல்சபைக் கூட்டங்களில் அரசாங்கத்தின் சார்பாக அவர்கள் பிரதிநிதிகளாக கலந்து கொள்கின்றனர். இந்த இரு உறுப்பினர்களும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். மேல்சபை உறுப்பினரான பீட்டர் அவர்கள் புதிய பிரதமர் அவர்கள் என்னை மேல்சபையில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள். இதற்கு முன்னர் நான் வெளி விவகாரத்துறை அலுவலகத்தில் பணியாற்றியுள்ளேன். நான் பல விவகாரங்கள் தொடர்பாகவும் பணியாற்றியுள்ளேன். அந்த விவகாரங்கள் தொடர்பாகவே கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களும் பணி செய்து வருகின்றார்கள் என்பது எனக்குத் தெரியும். அதாவது ஒருவர் மற்றவரை மதிப்பது, ஒவ்வொரு நபரது உரிமை -களையும் நிலைநாட்டுவது சமுதாயத்தில் சகிப்புத்தன்மையையும் மதினர்களுக்குரிய கண்ணியத்தை நிலைநாட்டுவது போன்றவையே அந்த பணிகளாகும் என்று கூறினார்கள்.

மேலும் ஹுஸூர் அவர்கள் மக்களை நல்ல விஷயங்களுக்காக ஒன்று திரட்டுகின்றார்கள். மேலும் மனிதனின் கண்ணியத்தை நிலைநாட்டு -கின்றார்கள். நான் அதற்காக ஹுஸூர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்று கூறினார். அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்களும் நல்ல நடவடிக்கையை மேற்கொண்டுள்ளீர்கள். சிரியாவில் வான்வெளித் தாக்குதலைத் தடுத்து நிறுத்தியுள்ளீர்கள். நீங்கள் மற்ற நாடுகளுக்கும் வழிகாட்ட வேண்டும் என்று நான் கருதுகின்றேன். எங்கு போருக்கான ஆபத்து இருக்கின்றதோ அதனை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் மேலும் இவ்வாறு கூறினார்கள்: இன்றைய நாட்களில் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலுள்ள தொடர்புகளில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. இதை தடுக்கவில்லை என்றால், மேலும் தொடர்புகள் மோசமாகிக் கொண்டே சென்றால் பிறகு மிகப்பெரும் அழிவு வரலாம். இந்த விவகாரத்தில் கனடா தனது பங்கை செலுத்த வேண்டும். நாளை என்ன நடக்கும்? என்று நமக்கு தெரியாது.

மேல்சபை உறுப்பினர்கள் கனடாவின் பங்கு இதில் என்ன இருக்க முடியும்? என்று கேட்டனர். அதற்கு கனடா, G8-ன் உறுப்பினராக இருக்கின்றது. UNO-வின் உறுப்பினராக இருக்கின்றது. இதுபோன்ற நிலைமைகளில் கனடாவின் செயல்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்? எவ்வாறு விவகாரங்களை நாம் கட்டுப்படுத்த முடியும்? என்பது உங்களுக்கு தெரியும். இப்போது நிலைமைகள் உடனுக்குடன் மாறிக் கொண்டேயிருக்கின்றன என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் மேலும் இவ்வாறு கூறினார்கள்: நான் 2013-ல் லாஸ் எஞ்சலஸ் (அமெரிக்கா)-ல் நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் சொற்பொழிவு நிகழ்த்தும்போது உலகப் போருக்கான அபாயம் நம் தலை மேல் இருந்து வருகின்றது. இதில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் என்று கூறியிருந்தேன். அப்போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மேல்சபை உறுப்பினர் ஒருவர் நான் நீங்கள் கூறுகின்ற பல விஷயங்களில் ஒருமித்த கருத்தை உடையவனாக இருக்கின்றேன். ஆனால் அணு ஆயுதங்கள் தொடர்பாக அவை பயன்படுத்தப் -படலாம் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை என்று கூறினார். ஆனால், கடந்த வருடம் இந்த மேல்சபை உறுப்பினர் நீங்கள் கூறிய கருத்து சரியானது என்று கூறியுள்ளார் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

இதைக் கேட்ட மேல்சபை உறுப்பினரான பீட்டர் பார்டர் அவர்கள் ஹுஸூர் அவர்கள் கூறிய விஷயம் சரியானதாகும். உண்மையிலேயே இன்று உலகில் அமைதியின்மை இருக்கின்றது. உங்களது அமைதியின் தூதுச் செய்தி மிகவும் முக்கியமானதும் மிகவும் வலுவானதுமாகும் என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் -தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அசல் விஷயம் நீதியை நிலை- நாட்டுவதாகும். சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் நீதியை நிலைநாட்ட வேண்டும். நீங்கள் எந்தக் கொள்கையை வகுத்தாலும் அது நீதியின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். அதில் ஒருதலைப்பட்சமாக எவருக்கு சாதகமாக -வும் நடந்து கொள்ளக் கூடாது. விருப்பு வெறுப்பு இல்லாமல் நீதியை கடைபிடிக்க வேண்டும். எந்தக் கொள்கையை வகுத்தாலும் தீர்ப்பு கூறினாலும் அது நீதியின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

ஒரு மேல்சபை உறுப்பினர் நீங்கள் உங்கள் ஜமாஅத்திற்கு என்ன தூதுச் செய்தியைக் கூறுகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள் இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வழங்கிய இந்த தூதுச் செய்தியைத்தான் நான் அவர்களுக்கு கூறுகின்றேன். அதாவது, حُبُّ الْوَطَنِ مِنَ الْاِيْمَانِ நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும். இந்த தூதுச் செய்திக்கு ஏற்ப செயல்பட்டால் பிறகு நாட்டில் எந்தவொரு மோசமான நிலைமையும் தீங்கும் ஏற்படாது. அரசிற்கு எந்தவொரு கவலையும் இருக்காது. ஒவ்வொருவரும் நாட்டிற்கு நன்மையை விரும்புபவராகவும் நன்றியுணர்வு உடையவராகவும் இருப்பார். எந்தவொரு கட்சியும் எந்தவொரு பிரிவும் நாட்டிற்கு எதிராக செயல்படா. நாட்டில் அமைதி நிலைபெறும்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: அஹ்மதிகளாகிய நாங்கள் சட்டத்தைப் பேணுபவர்களாக இருக்கின்றோம். நாட்டிற்காக நன்றியுணர்வை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றோம். நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமையாக முயற்சி செய்கின்றோம்.

ஒரு மேல்சபை உறுப்பினர் மனித உரிமைகள் தொடர்பாக உங்களது கருத்து என்ன? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இஸ்லாத்தின் தூதுச் செய்தி இரண்டு சொற்றொடர்களில் அடங்கியிருக்கின்றது. உங்களைப் படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். அவனுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். பிறகு இறைவனின் அடியார்களுக் -குரிய உரிமைகளைச் செலுத்துங்கள்.

ஜப்பானில் என்னிடம் ஒரு பாதிரியார் அமைதி என்பதன் விளக்கம் என்ன? என்று கேட்டார். அவருக்கு நான் இவ்வாறு பதில் கூறியிருந்தேன். அதாவது ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும். மற்றவர்களது உரிமைகளைப் பறிக்கக் கூடாது. ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குரிய உரிமையைச் செலுத்தினால் பிறகு சமுதாயத்தில் அமைதி ஏற்படும்.

உரிமைகளைச் செலுத்துவது தொடர்பாக அரபு மக்களின் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒரு நபர் குதிரையை விற்றுக் கொண்டிருந்தார். அவர் அதற்கு விலை 500 திர்ஹம்கள் என்று கூறினார். வாங்குபவர் உங்களது குதிரை இந்த இனத்தைச் சார்ந்ததாகும். இது மிகவும் விலை உயர்ந்த குதிரையாகும். இதன் விலை 1500 திர்ஹம்கள் என்று கூறினார். விற்பவர் நான் இதனை 500 திர்ஹம்களுக்கு விற்க இருக்கிறேன் என்று கூறுகின்றார். மறுபுறம் வாங்குபவர் நீங்கள் மிகவும் குறைந்த விலையில் குதிரையை விற்கிறீர்கள். இதன் விலை 1500 திர்ஹம்களாகும் என்று கூறுகின்றார். ஆக, இதுதான் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்குரிய உரிமைகளைச் செலுத்துவ -தாகும். இவ்வாறு ஒவ்வொருவருக்குரிய உரிமைகள் செலுத்தப்பட்டால் சமுதாயத்தில் அமைதி நிலைநாட்டப்படும்.

*(தொடரும்...)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 1 JUNE 2017 Issue No. 22

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

## அணு சக்தியின் தாக்கத்தின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான ஹோமியோ மருந்து

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகுந்த பரிவுடன் அணு சக்தியின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக தற்காப்பு நடவடிக்கையாக கீழ்க்காணும் ஹோமியோ மருந்துகளைப் பயன்படுத்துமாறு வழிகாட்டியுள்ளார்கள். மேலும் இறைவன் ஒவ்வொருவரையும் தனது பாதுகாப்பில் வைப்பதற்காக துஆ செய்யுமாறும் கூறியுள்ளார்கள்.

(குணமளிப்பவன் அவனே) هوالشافی

**பெரிய வயதிலுள்ள சகோதரர்களுக்கு:**

(1) Carcinosin CM (2) Radiam Brom CM

**10 வயதிலிருந்து 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு:**

(1) Carcinosin 1000 (2) Radiam Brom 1000

**10 வயதிற்கும் குறைவாக இருக்கின்ற குழந்தைகளுக்கு:**

(1) Carcinosin 200 (2) Radiam Brom 200

முதல் வாரத்தில் எண். 1 -ல் குறிப்பிடப்பட்ட மருந்தை ஒருமுறை உண்ணவும். இரண்டாம் வாரத்தில் எண். 2-ல் குறிப்பிடப்பட்ட மருந்தை ஒருமுறை உண்ணவும். பிறகு மூன்றாவது வாரத்தில் எண். 1-ல் குறிப்பிடப்பட்ட மருந்தை ஒருமுறை உண்ணவும். நான்காவது வாரத்தில் எண். 2-ல் குறிப்பிடப்பட்ட மருந்தை ஒருமுறை உண்ணவும். இதே வரிசையில் குழந்தைகள், பெரியவர்கள் ஆகிய இருவருமே இந்த இரண்டு மருந்துகளையும் மூன்று அல்லது நான்கு முறை உண்ணவும்.

(தகவல் : ஹ∴பீஸ் அஹ்மது பட்டி,
Homeopathic Department, London, U.K.)

(அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனல் 12 மே 2017 வெளி வந்துள்ள இந்த அறிவிப்பை அவர்களுக்கு நன்றி தெரிவித்தவாறு வெளியிடுகிறோம்.)

(குத்பா தொடர்ச்சி...)

சிலருக்கு எதிராகவே நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று கூறினர். ஆனால் உள்நாட்டு ஊடகங்களுக்கு பேட்டியளிக்கும்போது, அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல. இவர்கள் சதிகாரர்கள். இவர்களுக்கு ISIS தீவிரவாத அமைப்புடன் தொடர்பு உள்ளது. போன்ற பல அபத்தங்களைக் கூறினர். ஸலஃபிகளின் காரணமாக எதிர்ப்புகள் அதிகமாகி வருகின்றது. இது நடக்கவே செய்யும்.

அல்ஜீரிய மக்கள் கூறுகின்றனர்: எதிர்ப்பின் காரணமாக ஊடகங்கள் வாயிலாக அல்ஜீரியாவில் ஜமாஅத்தின் அறிமுகம் பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது. சில மக்கள் ஜமாஅத்தைப் பற்றி அறிய விரும்புகின்றனர். நாம் தூதுச் செய்தியை சென்று சேர்க்க முடியாத இடங்களில் இந்த எதிரிகள் கொண்டு சேர்த்து விட்டனர். எப்படியிருப்பினும் ஒரு பக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகிற்கு பரப்பும். இஸ்லாத்தின் தூதுச் செய்தியின் மூலம் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. மற்றொரு பக்கம் முஸ்லிம் நாடுகள் நம்மை எதிர்க்கின்றன. நான் முன்னர் கூறியதுபோன்று இன்றைய நாட்களில் அல்ஜீரியாவில் நமக்கு எதிர்ப்பு வலுத்து வருகின்றது. அல்ஜிரிய அஹ்மதிகளுக்காகவும் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். மேலும் முழு உலகிலும் அஹ்மதிய்யத்திற்கு எதிரான உணர்வு அதிரிகத்து வருகின்றது. எனவே, அந்த அனைத்து அஹ்மதிகளையும் அல்லாஹ் பாதுகாப்பில் வைக்க துஆ செய்யுங்கள். குறிப்பாக அல்ஜீரிய அஹ்மதிகள் ஒன்றும் பழைய அஹ்மதிகள் அல்ல. அல்லாஹ் அவர்களுக்கு உறுதியை வழங்குவானாக! அவர்களின் கஷ்டங்களையும் அல்லாஹ் விரைவில் அகற்றுவானாக!

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

நீங்கள் இதுவரை அறிந்தததில்லை. நீங்கள் இதனை அறிந்திருந்தால் இவ்வுலகிற்காக பெரும் கவலை கொள்ளக் கூடிய நிலை ஒரு நாளும் உங்களுக்கு வராது. தன்னிடம் ஒரு செல்வக் குவியலைக் கொண்டுள்ள ஒருவன் அதிலிருந்து ஒரு பைசாவை இழந்து விட்டால் அதற்காக அவன் கண்ணீர் வடிப்பானா ? கூச்சல் போடுவானா ? அல்லது தன்னை மாய்த்துக் கொள்வானா ? இவ்வாறிருக்க இறைவன் உங்களது ஒவ்வொரு தேவையின் போதும் உங்களுக்கு எப்போதும் வழங்கக் கூடிய கருவூலமாக இருக்கிறான் என்பதனை நீங்கள் அறிந்திருந்தால் நீங்கள் உலகிற்காக தம்மை இழந்த நிலையில் மயங்கி இருப்பானேன் ?

இறைவன் கிடைப்பதற்கரிய பெரும் கருவூலமாக இருக்கின்றான். நீங்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் அவன் உங்களுக்கு உதவி புரிகின்றவனாயிருக்கின்றான். எனவே அத்தகைய இறைவனுக்கு மதிப்பளியுங்கள். அவனில்லாமல் நீங்கள் ஒரு பொருட்டல்ல. உங்களது வழிவகைகளும் திட்டங்களும் ஒன்றுமற்றவையாகும்.

நீங்கள் உலகப் பொருள்கள் மீது முற்றிலும் சார்ந்திருக்கின்ற பிற சமுதாயத்தினரை ஒருபோதும் பின்பற்றாதீர்கள். பாம்பானது மண்ணைத் தின்பது போல் அவர்கள் உலகின் அற்பப் பொருள்களையே தின்றுள்ளனர். கழுகுகளும் நாய்களும் பிணங்களைத் தின்பதுபோல் அவர்களும் உலக இச்சை என்னும் பிணங்களையே கவ்விப் பிடித்துள்ளனர். அவர்கள் இறைவனை விட்டும் வெகுதூரம் சென்று விட்டனர். அவர்கள் மனிதர்களைத் தெய்வமாக மதித்து வணங்கினர். பன்றியைத் தின்றனர்; மதுவைத் தண்ணீரைப் போல் அருந்தினர். அவர்கள் அளவுக்கு மீறி உலகப் பொருள்கள் மீது விழுந்ததாலும் இறைவனிடமிருந்து உதவி தேடாததாலும் மரணித்து போயினர். ஒரு புறாவானது தனது கூட்டிலிருந்து பறந்து செல்வதைப் போல் அவர்களிடமிருந்து ஆன்மீக ஆவி பரந்துபோய் விட்டது. அவர்களை உலக இச்சை என்னும் தொழுநோய் பீடித்திருக்கின்ற காரணத்தால் அவர்களின் அகத்தின் எல்லா ஆன்மீக உறுப்புகளையும் அது அரித்து விட்டது. ஆகவே நீங்கள் இத்தகைய தொழுநோய்க்கு பெரிதும் அஞ்சுங்கள். எனினும் நியாயமான அளவில் ஒரு வரம்பிற்குள் நின்று கொண்டு உலகப் பொருள்களினால் பலன் அடைவதிலிருந்து உங்களை நான் தடை செய்யவில்லை. ஆனால் பிற சமுதாயங்களைப் போல் வெறும் உலகப் பொருள்களுக்கு அடிமையாவதையும் அப்பொருள்களையெல்லாம் தந்து உதவக்கூடிய அவ்விறைவனை மறப்பதையுமே நான் தடை செய்கிறேன். உங்களுக்குக் கண்கள் இருக்குமானால் எங்கும் இறைவனே நின்று விளங்குகின்றான் என்பதனையும் மற்றவையெல்லாம் பொருளற்றவை என்பதனையும் நீங்கள் கண்டு கொள்வீர்கள். அவனது ஆணை இன்றி உங்களது கைகளை நீட்டவோ மடக்கவோ உங்களால் ஒருபோதும் முடியாது. உயிரற்ற ஒருவன் அவனைக் கண்டு நகைப்பான். ஆனாலும் அந்தோ பரிதாபமே! அவன் மரணித்து ஒழிந்திருந்தால் இந்த நகைப்பை விட அவனுக்கு அது பெரும் நன்மையாக இருந்திருக்குமே!

எச்சரிக்கையாயிருங்கள் ! உலக விஷயங்களில் மிக முன்னேற்றம் அடைந்த பிற சமுதாயங்களைக் கண்டு நாமும் அவர்களைப் பின்பற்றலாம் என நினைக்காதீர்கள். கேளுங்கள் ! அறிந்து கொள்ளுங்கள் ! அவர்கள் உங்களைத் தன் பக்கம் அழைக்கின்ற அவ்விறைவனை முற்றிலும் அறியாதவர்களாகவும் அவனைப் பற்றி சிறிதும் கவனம் இல்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களின் இறைவன் யார் ? ஒரு பலவீனமான மனிதனே அவர்களின் இறைவனாவான். இதன் காரணத்தால் அவர்கள் அலட்சியமாக விடப்பட்டிருக்கின்றார்கள். நான் உங்களை உலகச் சம்பாத்தியத்திலிருந்தோ அல்லது உலகியல் தொழில் வியாபாரம் செய்வதிலிருந்தோ தடை செய்யவில்லை. ஆனால் எல்லாம் இவ்வுலகமே என நம்பியிருப்பவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்றே நான் கூறுகிறேன். உங்களின் ஒவ்வொரு செயல்களிலும் அவை உலக விஷயங்களாகவோ மார்க்க விஷயங்களாகவோ இருந்தாலும் அவற்றிற்காக இறைவனிடம் சக்தியும் உதவியும் தேடக்கூடிய பழக்கம் உங்களில் எப்போதும் இருந்து வரவேண்டியது அவசியமாகும். ஆனால் இவ்விதம் உதவி தேடுவது வறண்டு போன உங்கள் உதடுகளைக் கொண்டதாக மட்டுமில்லாமல் ஒவ்வோர் அருட்கொடையும் வானத்திலிருந்தே இறங்குகின்றது என்ற உண்மையான நம்பிக்கை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 20-23)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad